**செய்தி வெளியீடு எண்: 457** **நாள் : 26.08.2013**

செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், முதலமைச்சர் அலுவலகத்தில் தபேதாராகப் பணி புரிந்து வந்த திரு. D.ராஜு அவர்கள் 26.8.2013 அன்று மாரடைப்பினால் காலமானதையடுத்து அவரது மனைவி திருமதி மாலாதேவி அவர்களுக்கு அனுப்பிய இரங்கல் கடிதத்தின் விவரம் பின்வருமாறு:–

---

“தங்களின் அன்புக் கணவர் திரு. D.ராஜு அவர்கள் இன்று (26.8.2013) மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரமும், மனவேதனையும் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தினால் ஈடுசெய்ய முடியாத இழப்பு தங்களுக்கு ஏற்பட்டுள்ள போதிலும், இந்தத் துயரத்தை தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியையும், தைரியத்தையும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் அளிக்க வேண்டும் என்றும், திரு. ராஜு அவர்களின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாறவும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

திரு. ராஜு அவர்களை இழந்து வாடும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.”

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை 600 009
நாள்: 26.8.2013